# கிருபையுள்ள வார்த்தை

# KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 17 | February பிப்ரவரி | 2017

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப்பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் BETTY CHOATE

ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| உங்களை நீங்களே மாற்றுவது... | 3 |
| தொழுகை : பாடுதல் | 6 |
| ஏசாயா... | 9 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா.** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D.,

**C. சியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா.** D.Th.,



## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

வெள்ளி காலை

**6** மணி முதல் **6-30** மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

**தமிழன் T.V. யில்**


ஞாயிறு காலை 6-45 மணி


செய்தியாளர்


சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.




**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**


P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

வாலியர்களின் வாழ்வை
வளமாக்கும் வல்லவரின் வார்த்தை

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.90**

ஆசிரியர் உரை

# உங்களை நீங்களே மாற்றுவது எப்படி ?

## HOW TO CHANGE YOUR SELF ?

P.C. பிலேமோன் ராஜா



அன்பான வாசகர்கள் அனைவருக்கும், இறைமகன் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரால் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

உங்களை நீங்களே மாற்றிக்கொள்வதற்கு பைபிள், சுயமாக உதவிடும் வழியை காட்டும். கிறிஸ்துவை அறியாத நாம், கிறிஸ்தவராக மாற வேண்டி இருந்தது அல்லவா ? அப்படியானால் நாம் மாறப் பழகியவர்கள் தானே ! நமது பழைய பழக்கம், சுபாவத்தை நீக்கிவிட்டு, புதிய பழக்கம், சுபாவம், குணத்தை உருவாக்க வேண்டும். அப்படி புதிய பழக்கம், சுபாவம், குணத்தை வளர்க்க கருவாக்கி உருவாக்க பழையது நீக்கப்பட வேண்டும். சுயமாக உங்களை மாற்ற விரும்பினால், பைபிள், நீங்களாகவே படிப்படியாக, மற்றும் உங்களை நீங்களே உடனே மாற்றிக்கொள்ள ஊக்கமூட்டி, அபிவிருத்திக்கு உதவி செய்ய வல்லமையுள்ளது.

உங்களை நீங்களே மாற்றிக்கொள்ள, நீங்கள் செய்ய வேண்டுவது என்ன ?

### 1. வாழ்க்கையின் குறிக்கோளை மாற்றுங்கள்! (Change Your Purpose in Life)

அ) கடவுளுக்கு அன்பையும், அர்ப்பணிப்பையும் (ஒப்புக்கொடுத்தலையும்) கொடுங்கள்.




(Love and Dedication to God)

**ரோமர் 12:1,2** அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

மனதை புதிதாக்கினதினாலே மறுரூபமாக்கப்பட்டவர்கள், வேறுபாடாய் வாழ மாற்றி யோசிக்க வேண்டும். என் உடலும் உள்ளமும் தேவபணி செய்ய உலகமுறை பாணி இல்லாமல் இருக்க, மாற்று வழியை (தேவ வழியை) தேட வேண்டும் **(எபே 4:23).**


மக்கதோனியா கிறிஸ்துவின் சபையார் மற்ற பிராந்திய கிறிஸ்துவின் சபையாரைவிட வேறுபட்டு இருந்ததற்கு காரணம், தங்களை தாங்களே தேவனுக்கு ஒப்புக்கொடுத்தனர் **(2 கொரி 8:5).** தேவனுக்கு சேவை செய்ய விரும்பும் எவரொருவரும் தன்னுடைய குணங்களை, செயல்களை வசனத்தில் சொல்லப்பட்ட அளவு மாற்றிக்கொண்டும் இருப்பது, தேவனுக்கு சேவை செய்ய சுலபமாக்கிக் கொண்டே இருக்கும் **(பிர 12:3, மத் 6:33, மத்16:24).**

பரலோக தேவனுக்கு கீழ்படிய, அன்புகூற நம்மை உந்துவது (ஏவுவது) எது? அவரின் அன்பு! **( 1 யோவா 5:3,4 : 4:9,19).** தமது குமாரனை அனுப்பினதினாலே, அவர் முந்தி அன்புகூர்ந்தபடியால் முழு உலகிலும் உள்ள எல்லா சக்திகளிலும் மிகவும் வல்லமை நிறைந்த ஒரு சக்திதான் “அன்பு” **(1 யோவா 2:15–17, மத் 10:34–37, மத் 22:37–40, யோவா 14:15, 2கொரி 5:14–17).**

ஆ) கிறிஸ்து போன்ற சாயலாய் மாறுங்கள்! (Imitation of Christ)

**1 கொரி 11 : 1** நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.

யாரோ ஒருவரைப் போல இருக்க வேண்டும் என்பது, நமக்கு ஒருவகை உந்து சக்திதான். உதாரணமாக, விளையாட்டு வீரர்கள் போல, தலைவர்கள் போல, பைபிள் நபர்களை போல, போதர்கர்கள் போல என்று நம்மை கவர்ந்த யாரோ ஒருவரைப்போல இருப்பது நமக்கு ஊக்கம் தரும். **(மத் 10 : 24,25, அப் 11 : 26, 1பேது 2:21–22).** வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு தீர்மானிங்களிலும், இப்பொழுது, இயேசு என்ன ? ஏன் ? எவ்வளவு ? எப்படி செய்வார் ? என யோசிக்க வேண்டும்.



இ) நித்திய தண்டனைக்காக அல்ல, நீடித்த நிலை வாழ்வுக்காக, மிகுதியான ஆவலை தூண்டி வளர்த்துக்கொள்ள வேண்டும்.

(Desire for Eternal life, not for Eternal Punishment)

**1 கொரி 9 : 25** பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள்; நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.

ஓட்டப்பந்தய வீரன் தன்னை அடக்கிகொள்வான்; அவனின் பரிவு அவனை தூண்டுகிறது. நித்திய ஜீவ கிரீடம் பெறத்தக்கதாக உற்சாகமூட்டுதல் குறையும்

போதெல்லாம், தேவன் இருப்பதின் முக்கியதுவத்தை சிந்தியுங்கள் (யாக் 1:12, வெளி 2:10).

## 2. கடவுளின் உதவியால் நான் மாற முடியும் என்று நம்புவோம்!

## (Believe you can change with God's help)

நீதி 4:23 எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.



மக்களும் சூழ்நிலைகளும் உங்களை தடைசெய்துவிட முயலும்; ஆனாலும் மாறுவதை விட்டுவிடாதே! என்ன முடிவு எடுத்தோமோ அதை தொடர்ந்து செய்வோம்.

தேவன் தப்பிக்கொள்ள போக்கையும் உண்டாக்குவார்.

1 கொரி 10:13 மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். மற்றும், நம்மை பெலப்படுத்த அவர் இருக்கிறார்.

பிலி 4:13 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. கிறிஸ்துவின் சக்தியை பயன்படுத்திக்கொண்டால், தாவீது போல ஜெயிக்கலாம். (சங் 37:5:, எபே 6:10–18, எபே 3:20,21: 2 கொரி 9:8).

## 3. உங்களுடைய பழக்கவழக்கங்கள் எப்படி இருக்க வேண்டுமென்று வேத ஆராய்ச்சி செய்யுங்கள்!

## (Study the Bible about habit)

யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய்.

தேவபணியில் சிறக்க, பைபிளை தியானம் பண்ணவும். நீங்கள் மாற்ற வேண்டிய ஒவ்வொரு பழக்கத்தை பற்றி பைபிளிலிருந்து தெரிந்துக்கொள்ளுங்கள். மற்றும் ஏன் அதை நீ மாற்றிக்கொள்ள வேண்டும் என காரணம் தெரிந்துக்கொள். மேலும் வேதம் அதைப்பற்றி கூறுவதை தியானம் பண்ணவும் (சங் 1:2, 119:11).

உபா 6:6–9 இந்த பகுதி வசனத்தை அடிக்கடி உங்களுக்கு நியாபகபடுத்திக்கொள்ளுங்கள் (Remind); இயேசு சோதனைகளை வெற்றிபெற பயன்படுத்திய வழிமுறை, பைபிள் வசனங்களை பயன்படுத்தி வென்றதுதான். இது நமக்கு எவ்வளவு பெரிய முன்மாதிரி (மத் 4:1–11). இச்சையடக்கத்தில் வெற்றிபெற விரும்பினால், இயேசுபோல வசனத்தை பயன்படுத்தினால், அது ஞானமான செயல். (நீதி 3:5,6 : 2 தீமோ 3:16,17 : ரோம 1:16 : எபி 4:12)



## 4. பாவத்திலிருந்து மனம் மாறுவது!

## (Repent of Sin)

அப் 8:22 ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்.

பாவம் மனந்திரும்புதலைக் கேட்கிறது (மத் 21:28–29, அப் 17:30, அப் 11:23). பாவ பழக்கத்தை மாற்றிக்கொள்ள விரும்புவோர், முதலில் மனதை மாற்றிக்கொள்ள வேண்டும். பாவத்தை மூடி மறைக்காதீர். அதை புறக்கணிக்க கற்றுக்கொள்ளுங்கள். பயிற்சி பெறுங்கள் (நீதி 28:13): துக்கம் மட்டும் போதாது (2கொரி 7:10).

## 5. செயல்திட்டம் ஒன்றை திட்டமிட்டு வரையுங்கள்!

## (Develop a Plan of Action)

நீதி 14:22 தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்களல்லவோ ? நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு.

'நல்லது மட்டுமே செய்யனும், கட்டாயம் தீமை செய்யவே மாட்டேன்' என்பதும் முக்கியம். இதற்கு, படிப்படியாக செயல்படுத்த ஒரு திட்டத்தை எழுதி வையுங்கள் (ரோம 8:28). மனித மீட்பிற்கு தேவன் திட்டமிட்டார் (எபே 1:4–5). தேவனுடைய பிள்ளைகள் எல்லாம் திட்டமிட்டு செயல்பட வேண்டும் (லூக் 14:26–33, தானி 1:8, சங் 17:3, 2கொரி 9:7, அப் 11:23) கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி, மனதில் நியமித்தப்படியே திட்டமிட்ட, வரிசை கிரமமான ஒரு பரிட்சை பட்டியல் தேவை. இதை காலக்கிரயமாக செய்ய வேண்டும்.




## 6. தொடர்ந்து தவறாது ஜெபிக்கவும்!

## (Continued to pray without Ceasing)

பிரார்த்தனை 2 வழிகளில் முக்கியம்.

அ) பாவமன்னிப்புக்காக ஒவ்வொரு தேவ பிள்ளையும் கட்டாயம் ஜெபிக்க வேண்டும். ( அப் 8: 22, 1யோ 1:8–10, நீதி 28:13, மத் 16:12 ).

ஆ) தேவ வழிகாட்டுதலுக்காக (நடத்துதல்) ஜெபியுங்கள்

சங் 143:10 உமக்கு பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.



தீமையிலிருந்து தப்பிக்க வழி கேட்டு ஜெபியுங்கள்.

**(மத் 6:13):** தொடர்ந்து எதுவானாலும் ஜெபியுங்கள் **(1தெச 5:17, கொலே 4:2 மத் 26:63-46):** பரலோக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார் **(1பேது 5:7, பிலி 4:6-7, எபே 6:11,13,18).**

### 7. மற்ற கிறிஸ்தவர்களின் உதவி கட்டாயம் தேவை!

### (Get help from other Christians)

ஒருவருக்கொருவர் தவறுகளை அறிக்கையிட்டு பழகுங்கள்.

**யாக் 5:16** நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

ஒருவர் பாரம் ஒருவர் தாங்குங்கள்.

**கலா 6:2** ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

நம் பாவம் யாரையாவது பாதித்திருந்தால் மன்னிப்பு கேட்க தயங்கக்கூடாது **(மத் 5:23,24).** சபை என்பது நம் சகோதரத்துவ பாசம்காட்ட, பழக, பிறரை உயர்த்தி நம்மை தாழ்த்தி, போட்டிபோட்டு ஊக்கப்படுத்த ஏற்படுத்தப்பட்ட, தேவ குடும்பம் **(எபி 10:24,25, எபே 4:15,16).**



### 8. எது சரியானதோ அதை மட்டும் விடா முயற்சியுடன் செய்யுங்கள்!

### (Do only what is Right)

வெளியேறிய பிசாசு காலியாக இருந்ததை கண்டு மீண்டும் வந்தது; ஆகையால் கவனம் தேவை. இருதயத்தை தேவ வசனத்தினாலே நிரப்புங்கள்; விடாமுயற்சியுடன் திட்டமிட்டு மாறிக்கொண்டே இருங்கள்.

**மத் 12:43-45** அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து , இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல் : நான் விட்டு வந்த வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும் , பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும்; அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்.

### 9. சோதனையை தவிர்த்திடுங்கள்!


### (Avoid Temptations)

சோதனைக்குட்படாமல் இருக்க ஜெபியுங்கள் **மத் 6:13** எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்; ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

உங்களை நீங்களே தவறான காரியங்களுக்கு பயன்படுத்துவதை விட்டுவிடுங்கள்.

**ரோம 13:14** துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். உங்களை மற்றவர்கள் தவறான காரியங்களுக்கு பயன்படுத்துவதற்கு இடமளித்து மோசம் போகாதிருங்கள்.

**1கொரி 15:33** மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.



### 10. பொறுமையாயிருங்கள்!

### (Be Patient)

சோர்ந்துபோகாமல் நற்கிரியை செய்துகொண்டே இருங்கள்.

**ரோம 2:7** சோர்ந்துபோகாதிருங்கள் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திஜீவனை அளிப்பார். எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம்.

**கலா 6:9** நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். பழக்கவழக்கம் என்பது உடனே வருவதல்ல, படிப்படியாக தொடர் பயிற்சி, முயற்சியிலே வளர்க்கப்பட வேண்டிய ஒன்று. எனவே, முதிர்ச்சியடைய தொடர்ந்து வளருங்கள் **(2பேதுரு 3:18).** இறுதியாக அன்பான சகோதரனே ! சகோதரியே ! உன்னை நீயே மாற்றிக்கொள்வதை தான் தேவன் விரும்புகிறார் **(எசே 18:23):** ஆயினும், நாம் மாறி நடக்க அவர் பைபிள், சபையின் மூலம் உதவி செய்கிறார். யாரையும் அவர் பலவந்தம் செய்யாமல், அவரவர்களே சுதந்திரமாக முடிவெடுக்க அனுமதிக்கிறார், ஆகையால் நீங்கள் தான், உங்களை நீங்களே பலவந்தபடுத்தி மாற்ற வேண்டும் **(ரோ 6:13-23).** அப்படி மாறும்வரை அவர் பேராவலோடு, பேரன்புடனே நீடிய பொறுமையுள்ளவராய் காத்திருக்கிறார் **(2பேது 3:9).**

## பாடம் : 5 பாடுதல்

Jerry Bates



தொழுகையின் அனைத்து செயல்களும் ஒரு கிறிஸ்தவனுக்கு மனமகிழ் அனுபவமாயிருக்கும்; எனவே பெரும்பாலான ஜனங்களுக்கு, மிகவும் ரசித்து அனுபவிக்கும் செயல் ஒன்று இருக்குமானால், அது பாடுவதாகத்தானிருக்கும். அநேக நேரங்களில் ஜனங்கள், வாய்த்திறவாமல் ராகம் எழுப்பியோ அல்லது பாடியோ தங்களுக்குத் தாங்களே கேட்கும்படி குரல் எழுப்புவர்; அது சப்தமாகவோ அமைதியாகவோ இருக்கும். பாடுதல் என்பது கிறிஸ்தவத் தொழுகையில் ஒரு முக்கியமான பகுதி; இருந்தாலும் இது மிகவும் முரண்பாடானது. ஆகவே இதை சரியாக புரிந்து கொள்ள உங்கள் மனதைத் திறவுங்கள்; எளிமையான முறையில் தேவன் வேதவாக்கியங்கள் மூலம் உங்களிடம் பேச விடுங்கள்.

புதிய ஏற்பாட்டில் பாடுவதைக் குறித்துப் பேசுகிற சிறப்பு மிக்க இரண்டு வசனங்கள், **எபேசியர் 5:19** மற்றும் **கொலோசெயர் 3:16,17.** அவைகள் இரண்டும் ஒரே மாதிரியான கருத்துத் தோற்றமுடையவை. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, **(எபேசியர் 5:19).** கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொள்ள உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி, (கொலோசெயர் 3:16-17).

### பாடுதல் போதிக்கும் வழிகளில் ஒன்று

நாம் பாடுகிற பாடல்களில் உள்ள வார்த்தைகளால் நாம் ஒருவருக்கொருவர் போதித்துக் கொள்கிறோம். வார்த்தைகள் பாடப்படுவது 'தெளிவாகப் புரிந்து கொள்ளப்படுதலை' உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் , அவை வசனரீதியான போதனைகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். கள்ளப் போதகத்தை ஒருவருக்குப் போதிப்பது தவறு என்பது போலவே, அவைகளைப் பாடுவதும் தவறாகி விடும். வழக்கமாக நாம், இசைக்குப் பொருத்தமாக அவைகளைக் கொண்டு வந்தால், அது எவ்வளவு எளிதாயிருக்கும் என்ற கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். பிள்ளைகளுக்குப் போதிப்பதில் எளிமையான வழிகளில் ஒன்று அவர்களுக்கு பாடல்களைப் போதிப்பது. அவர்கள் எளிதாகக் கற்றுக் கொள்ளவும் இயலும்.அது அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் நேரமாகவும் இருக்கக்கூடும். இப்படியாகப் பாடுதல் என்பது ஒரு மேன்மையான போதனை முறையாகிறது. அதில் வரும் ராகம் இரண்டாம் பட்சமானது; ஏனெனில் வார்த்தைகள் மட்டுமே போதிக்கவும் பக்திவிருத்தி அடையும் செய்கிறது. நாம் ஆவிக்குரிய பாடல்களை பாட வேண்டியவர்கள்; நாம் விரும்புகிறதற்காகவோ நமக்கு நல்லது என்று தோன்றுவதாலோ அல்ல! சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுக்களுக்கு இடையேயான வித்தியாசங்களைக் குறித்து ஜனங்கள் கேட்பதுண்டு. இந்த வார்த்தைகள் பெரும்பாலும் மாறி மாறிப் பயன்படுத்தப்படுகிறது; ஆகையால், அவைகளை வித்தியாசப்படுத்தி பாடல்களின் வகைக்கான எந்த ஒரு முயற்சியும் தேவையற்றது.

நாம் ஒருவருக்கொருவர் பாடல் மூலம் போதிக்கிறோம் என்பது, நமது தொழுகையில் பரஸ்பரம் நமது தோற்றத்தை விளங்கப்பண்ணுகிறோம் என்பதை வலியுறுத்துகிறது. இதன் விளைவு நாம் ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியை உண்டாக்குகிறோம். பாடலைக் காட்டிலும் மிக முக்கியமான வேத வசனக்கொள்கைகளை வலியுறுத்தி ஒருவரை ஊக்கப்படுத்த சில காரியங்கள் உண்டு. நாம் ஒருவருக்கொருவர் போதிப்பது, என்பதாகிய இது பாடலில் முழு சபையாரையும் உட்படுத்துகிறது. ஆதலால் பாடல் குழு, அல்லது வேறு சில குழுக்களாக அமைத்துப் பாடுவது, ஒரு சிலர் மட்டுமே பாடவும் மற்றவர்கள் கவனித்துக் கொண்டும் இருத்தல், அது ஒருவருக்கொருவர் போதித்தலாகாது. பாடுதல் மட்டுமே தொழுகையில் முழு சபையும் பங்கேற்று ஒரே மாதிரியான குரலிசையை எழும்பப் பண்ணுகிறது.

### பாடுதல் ஒரு ஆவிக்குரிய பலி

ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் **(எபிரேயர் 13: 15).** இந்த வசனம் பழைய ஏற்பாட்டு பலி செலுத்தும் முறையைக் குறிப்பிட்டு, பாடுதல் என்பது நம்முடைய ஆவிக்குரிய ரீதியில், சரீரப் பிரகாரமான பலிக்கு மாறுதலாகக் குறிப்பிடப்படுகிறது. நம்முடைய பாடல்கள் மூலம் தேவனுடைய அற்புதமான கிரியைகளுக்காகவும், அதேபோல அவருடைய மாபெரும் ஆசீர்வாதங்களுக்காகவும் துதித்து பாடுகிறோம். இப்படியாக, பாடுதல் நம்முடைய முழு நபரையும் உட்படுத்துகிறது; ஆவி, மனம், இருதயம், உதடுகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்குகிறது. **எபேசியர் 5 : 19,** நம்முடைய இருதயத்தில் கர்த்தரை பாடி கீர்த்தனம் பண்ண வேண்டுமென கட்டளையிடுகிறது. நாம் பாடும்போது, பாடலில் வரும் செய்தியுடன் கலந்து



வரும் இசையாக, நம்முடைய மனதிலிருந்தும் இருதயத்திலிருந்தும் தோன்ற வேண்டும்; அப்படியிராதபட்சத்தில் நமது பாடல்களை பாடுவதெல்லாம் வெறும் சடங்காச்சாரமாகவே இருக்கும். வெறுமையான சடங்காச்சாரங்களில் ஒருபோதும் தேவன் பிரியப்படுவதில்லை.

## பாடுதல் சபையின் ஒற்றுமையை வலியுறுத்துகிறது.

**ரோமர் 15:6ல்,** பவுல் ரோமக் கிறிஸ்தவர்களிடம், நீங்கள் ஒருமனப் பட்டு நம்முடைய பிதாவாகிய தேவனை ஒரே வாயினாலே மகிமைப்படுத்தும்படி என்று மன்றாடுகிறார். புதிய ஏற்பாட்டில் ஏழு வசனப்பகுதிகள் சபையின் ஒற்றுமையை வலியுறுத்துகின்றன; ஆனாலும் பாடுதலே நெருக்கமான உறவை ஒருவரிலொருவர் ஏற்படுத்தும் ஒரு வழியாக இருக்கிறது. அதிலும் முக்கியமாக, தேவனுக்கு ஒருவர் செய்யும் தொழுகை நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தில் ஒற்றுமையில்லாமல் செய்யப்பட்டால் பாதிப்பையே ஏற்படுத்தும். ஒற்றுமையுடன் கூடி கிறிஸ்தவர்கள் பாடும் பாடல்கள், ஒரே வாயிலிருந்து வருவது போல் இருக்குமாகில், சில காரியங்கள் இன்னும் அதிகமாய் மேம்பாடு அடையும்.

## தேவன் எப்படி அங்கீகரிக்கிறார்!

நாம் எப்படி நம்முடைய செயல்களுக்கு, விஷேமாக நம்முடைய தொழுகைக்கு ஆதாரத்தைப் பெறுவது என்பது குறித்து தப்பான புரிந்து கொள்ளுதலைக் கொண்டுள்ளனர். கட்டளைகளில் இரு வகையுண்டு : பொதுவான கட்டளைகள், குறிப்புக் கட்டளைகள். ஒரு பொதுவான கட்டளை என்பது ஒரு செயலின் முறை எப்படி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லாமல் கட்டளையிடுதல். மற்றொருபுரம், குறிப்புக் கட்டளை என்பது ஒரு செயலை எப்படி செய்ய வேண்டுமென குறிப்பிட்டுச் சொல்லுதல். பொதுவாகக் காணும் சில உதாரணங்களைப் பாருங்கள். 'புறப்பட்டுப் போய் சுவிஷேத்தைப் பிரசங்கியுங்கள்' என்று தேவன் நமக்கு கட்டளையிடுகிறார். இவைப் பொதுக்கட்டளைகள்! ஏனெனில் போகும் விதம் பற்றியோ போதிக்கும் முறை குறித்தோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. 'கொப்பேரு' மரத்தால் பேழைய உண்டு பண்ணும்படி நோவாவுக்குச் சொல்லப்பட்டது. பயன்படுத்த வேண்டிய மரம் குறிப்பாகச் சொல்லப்பட்டது. இதினால் வேறுவகை மரத்தைப் பயன்படுத்த தடையிருந்தது. இசை என்பதும் எல்லாவகை இசைகளையும் உட்படுத்தியது. தேவன் இசைகளை எழுப்பு என்று சொல்லியிருப்பாரானால், அது, கிறிஸ்தவர்கள் எந்த வகை இசையையும் பயன்படுத்த தெரிவு செய்து கொள்ளலாம். எப்படியிருப்பினும், தேவன் பாடுதலை மட்டும் குறிப்பாகச் சொன்னார்; இது மற்ற எல்லா வகையான இசைகளையும் இயல்பாக புறந்தள்ளுகிறது. இப்படியாக இசைக்கருவிகள் தவிர்க்கப்படுகிறது. இசைக்கருவி பயன்படுத்துவதை தேவன் குறிப்பாகச் சொல்ல வில்லை யென்றாலும் இதுதான் உண்மை.

## வரலாற்றில் இசைக்கருவி

பெரும்பாலான மதக்கூட்டங்கள் தங்களுடைய பாடலுடன் இசைக்கருவியைப் பயன்படுத்துகின்றனர். இது பொதுவான ஒரு வழக்கமாகிப் போனதால், இது சரிதானா என்ற கேள்வியை எழுப்புகின்றனர். ஆகிலும் எல்லா காலமும் பயன்படுத்தப்பட்டவையில்லை. கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மட்டுமே இசைக் கருவி பயன்படுத்துதல் மிகவும் பரவலாக கேள்வியெழுப்பாமல் பயன்படுத்தப்படுகிறது.

தொழுகையில் இசைக் கருவி பயன்படுத்தச் சொல்லப்படாததால், புதிய ஏற்பாட்டில் பாடும் படியாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. இரண்டு வகையான இசைகள் உள்ளன. குரல் இசை மற்றும் கருவி இசை. தொழுகை என்பது ஆவிக்குரியதாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது, அதே வேளையில் இசைக்கருவியின் பயன்பாடு நம்மீது அல்லது தற்காலிகமானதாக வலியுறுத்தப்படுகிறது. பவுல் இசைக் கருவியை வாசிப்பதைச் சொல்லவில்லை, ஆனால் இருதயத்தையே இசைக் கருவியாகப் பயன்படுத்தச் சொல்லுகிறார்.

**கொலோசெயர் 3:17 ல்** மனுஷர்கள் எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்தினாலே, அதாவது இயேசுவின் அதிகாரத்தின் பேரில் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறது. அதிகாரமளிக்கப்படாத இசைக்கருவியோடு நாம் எப்படி இயேசுவின் அதிகாரத்தில் பாட முடியும்? இசைக் கருவி பயன்பாட்டைக் குறித்து வசனங்கள் முற்றிலும் அமைதியளிக்கிறது; எனவே இந்த பயன்பாட்டை வசனங்கள் கண்டனம் பண்ணாததால், அவைகளைப் பயன்படுத்துவது ஒரு பரிபூரணப்பட்ட சம்மதமே. ஆகிலும் அமைதியளிப்பது அதிகாரமளிப்பதல்ல. எபிரேயர் புத்தகத்தில் இதற்கான இரண்டு உதாரணங்களைப் காண்கிறோம். **எபிரேயர் 1:45ல்** எழுத்தாளர், கிறிஸ்துவின் மேன்மையை தேவதூதர்களுக்கு மேலாகக் காண முற்படுகிறார். அப்படிச் செய்வதற்கு, நீர் என்னுடைய குமாரன் என்று தேவதூதர்களில் யாருக்காகிலும் எப்பொழுதாகிலும் சொன்னதுண்டா? என்று எழுத்தாளர் கேட்கிறார். அதற்கான பதில், ஒருவரிடத்திலும் சொல்லப்படவில்லை என்பது தான். ஆகையால், கிறிஸ்து தேவ தூதர்களைக் காட்டிலும் மேலானவர். **எபிரேயர் 7:13,14ல்** எழுத்தாளர், ஒரு புதிய ஆசாரித்துவத்தின் அவசியத்தைச் காண முற்படுகிறார். இயேசு ஆசாரியனாக இருக்க வேண்டுமானால், ஒரு புதிய பிரமாணம் நிலவரப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் பழைய பிரமாணத்தில் யூதா கோத்திரத்திலிருந்து ஒரு ஆசாரியன் வரவேண்டும்மென்று சொல்லவில்லை.

மாறாக அனைத்து ஆசாரியர்களும் லேவி கோத்திரத்திலிருந்தே வரவேண்டும் என்று நியாயப்பிரமாணம் குறிப்பாகச் சொல்லுகிறது. லேவிக் கோத்திரம் மட்டும் குறிப்பாகச் சொல்லப்படுவதால், அது இயல்பாகவே பிற கோத்திரங்களை புறம்பாக்குகிறது. இப்படியாக, கிறிஸ்து மோசேயின் பிரமாணத்தின்படி ஆசாரியனாக இருக்க முடியாது. ஏனெனில் அவர் லேவிக் கோத்திரத்தில் வரவில்லை. அதே போல்தான், பாடுதல் என்பதும் குறிப்பான அதிகாரமாக அளிக்கப்பட்டுள்ளது; மற்ற எந்த வித இசையும் இதினால் புறம்பாக்கப்படுகிறது. இன்னொரு வார்த்தையில் சொன்னால், வாத்திய இசைக் கருவியைப் பயன்படுத்த எந்த வித அதிகாரமும் அளிக்கப்படவில்லை.



கிறிஸ்தவத்தியை முழு வரலாற்றிலும் கருவி இசை எதிரிக்கப்பட்டே வந்துள்ளது. சபையின் ஆதிபிதாக்கள் தொழுகையிலே இசைக் கருவிகளை கூடுதலாக்குவதை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்துள்ளனர். அநேக நூற்றாண்டுகள் வரை எந்த சபையிலும் இசைக் கருவி பயன்படுத்தப்படவில்லை. முதல் முறையாக 7ம் நூற்றாண்டின் பின்பகுதியில் ஆர்மோனியம் அறிமுகப்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது. யூதர்கள் தங்கள் தேவாலயங்களிலும், கிரேக்கர் தங்கள் விக்கிரக வணக்கத்திலும் பயன்படுத்தியிருக்கின்றனர். ஆகையால், ஆதிக் கிறிஸ்தவர்கள் நிச்சயமாக இசைக் கருவிகளின் பயன்பாடுகளில் பரிச்சயமுள்ளவர்களாகவும், அதிலே ஆறுதல் பெறுகிவர்களாகவும் இருந்திருக்கக் கூடும்; இருந்த போதிலும், அது நடைமுறையில் ஒவ்வொருவராலும் ஏற்புடையதாயிருந்தும், ஆதிசபையிலே எந்தவித இசைக் கருவியும் அவைகளைப் பக்திக்குரிய தொழுகைகளிலே பயன்படுத்தவில்லை.

கூடுதலாக, இன்றைக்குக் காணும் பிரிவுக் கூட்டத்தின் ஸ்தாபங்களில் அநேகரும் கூட, இசைக் கருவிப் பயன்பாட்டை எதிர்த்துள்ளனர். அவர்களுடைய பேச்சுகளில் காணப்பட்ட சில மேற்கோள்களைக் கவனியுங்கள்.

- **மார்டீன் லூத்தர்:** தொழுகையில் ஆர்மோனியத்தைப் பயன்படுத்துவது பாகால் வணக்கத்தின் அறிகுறி.
- **ஜான் கால்வின்:** இந்த வழக்கம் தூபவர்க்கங்களைக் காட்டுவதைக் காட்டிலும் பொருத்தமான செயலல்ல; அதேப் போல மெழுகுத்திரி ஏற்றுவது, அல்லது வேறு நியாயப்பிரமாணத்தின் சில நிழல்களை புதிப்பிப்பகைக் காட்டிலும் வித்தியாசமானதல்ல; ரோமன் கத்தோலிக்கர்கள் யூதர்களிடமிருந்து இவைகளை இரவல் வாங்கினார்கள்.
- **ஜான் வெஸ்லி :** நான் கேள்விப்பட்டது கூட இராத தொழுகையில், ஆர்மோனியம் (அல்லது கருவி இசை) அனுமதிக்கப்பட்டால், எனக்கு எந்த வித ஆட்சேபனையுமில்லை.
- **ஜான் க்னான்ஸ் :** ஆர்மோனியத்தை ஒரு குரல் வளையத்தின் விசில்கள் என்றழைத்தார்.

பொதுவான செய்திகள்

## ஜல்லிக்கட்டு

- ஜல்லிக்கட்டிற்கு ஆதரவாக தமிழ்நாட்டிலும், தமிழ்நாட்டுக்கு வெளியேயும் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் போராட்டங்கள் நடந்தன.
- இந்தப் போராட்டங்கள் தைப் புரட்சி, மெரீனாப் புரட்சி எனும் சிறப்புப் பெயர்களால் ஊடங்களாலும், சில அரசியல் கட்சித் தலைவர்களாலும் குறிப்பிடப்பட்டன.
- அரசியல் கட்சித்தலைமைகளின் முனைப்புகள் ஏதுமின்றி, தன்னிச்சையாகவே பொதுமக்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், சமூகவலைத்தளங்களின் வழியாகவே பெருந்திரளான இளைஞர்களை திரட்டி, அமைதி வழியில் போராட்டங்களை நடத்தினர்.
- சமூக இணைதளங்களின் வாயிலாக ஒருகிணைந்த இளைஞர்களும், கல்லூரி மாணவர்களும் இந்தப் போராட்டங்களை நடத்தினர்.
- அலங்கநல்லூர், சென்னை மெரீனா கடற்கரை, மதுரை தமுக்கம் மைதானம், கோவை வ.உ.சி மைதானம், திருச்சி, சேலம், திருநெல்வேலி வ.உ.சி மைதானம், புதுச்சேரி ஆகியன முக்கியப் போராட்டக் களங்களாக அமைந்தன.
- தமிழகத்தில் ஏழு நாட்கள் அறவழியில் நடந்துவந்த போராட்டம் உலகமனைத்திற்கும் முன்மாதிரியாக இருந்தது.

# தொடர் 19 ஏசாயா : மேசியாத்துவத் தீர்க்கதரிசி

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் : **1,2, 6–9, 13,28, 35, 40, 43, 45, 49, 52, 53, 55, 57, 59, 60–62, 64–66.**

## தலைப்பு

ஏசாயாவின் புத்தகம் அதன் எழுத்தாளரின் பெயரால் அழைக்கப்படுகிறது. **"ஏசாயா"** என்றால் **"இரட்சிப்பு யெகோவாவினுடையது"** என்று அர்த்தமாகும்.

## பின்னணி

ஏசாயாவின் புத்தகம், பழைய ஏற்பாட்டில் உள்ள பதினேழு தீர்க்கதரிசனப் புத்தகங்களில் முதலாவது ஆகும். முதல் ஐந்து தீர்க்கதரிசனப் புத்தகங்கள் **''பெரிய தீர்க்கதரிசிகள்''** என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. தீர்க்கதரிசி என்பவர் தேவனுக்காகப் பேசுபவராய் இருந்தார். தீர்க்கதரிசியானவர், தேவனுக்காகப் பேசியதில் சிலவேளைகளில் எதிர்காலத்தை முன்னுரைத்தார், ஆனால் இது அவரது ஊழியத்தின் பிரதான வலியுறுத்தமாக இருந்ததில்லை. அவரது முதன்மைச் சுமையானது அவரது சொந்த நாட்களில் நடந்தவற்றைப் பற்றியதாயிருந்தது.

உசியா அரசரின் நாட்களில் தொடங்கி (1:1), எசேக்கியா மரணத்திற்குச் சற்றே பிறகு வரைக்கும் **(2 நாளாகமம் 32:32),** ஏசாயா ஒரு தீர்க்கதரிசியாக, கவிஞராக, அரசியல்வாதியாக, ஆலோசகராக, பேச்சாளராக, மற்றும் எழுத்தாளராக, ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகள் விரிவான ஊழியத்தைக் கொண்டிருந்தார். ஏசாயாவின் வாழ்நாள் காலத்தின்போது, இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம் அசீரியாவினால் அழிக்கப்பட்டது. அவ்வேளையில், ஏசாயாவின் செல்வாக்கினால் எருசலேம் காப்பாற்றப்பட்டது. இருந்தபோதிலும் சீர்திருத்தத்தின் காலம் நிலைத்திராது என்று ஏசாயா முன்னெதிர்பார்த்தார்; எனவே அவர் பாபிலோனிய சிறையிருப்பும் அந்த சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதலையும் முன்னதாகவே கண்ணோக்கினார். ஏசாயா தமது புத்தகத்தில், மூன்று செயல்களைச் செய்தார்: (1) யூதா மக்களுக்கு முன்பாக என்ன விழும் என்பது பற்றி அவர்களுக்கு அவர் எச்சரிக்கை செய்தார்; (2) மற்ற நாடுகளுக்கு எதிராகவும் அவர் தீர்க்கதரிசனங்களை முழங்கி, தேவன் தம்மைக்கொண்டு பேசுவது என்ன என்று அவர் (தேவன்) அறிந்திருக்கின்றார் என்று நிரூபித்தார்; மற்றும் (3) அவர் வெளிச்சமான நாட்களை முன்கண்ணோக்கினார்: சிறையிருப்பிற்குப் பின்பு திரும்பி வருதல், மற்றும் மேசியாவினுடைய வருகையும் அவரது ராஜ்யமும்.



ஏசாயா, கோரேஸ் என்ற பெர்சிய அரசர் பிறப்பதற்றுச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே அந்த அரசரின் பெயரைக் குறிப்பிட்டபடியால், வேதவசனங்களின் வாய்ச்சொல்லினாலான ஏவுதல்களை மறுப்பவர்கள், இரண்டு அல்லது அதற்கு அதிகமான **"ஏசாயாக்களை"** வேதாகமம் குறிப்பிடுகிறது. இவர்களில் குறைந்தபட்சம் ஒருவராவது கோரேஸுக்குப் பின்பு வாழ்ந்தவராய் இருந்தார் என்று நினைக்கின்றனர். இருப்பினும், ஏவுதல் பெற்ற வேதாகமம் (2 தீமோத்தேயு 3:16, 17ஐக் காணவும்) ஏசாயா என்று பெயர்கொண்ட ஒரே ஒரு தீர்க்கதரிசனம் (44:28; 45:1-14) வேதகாமத்தில் மிகவும் குறிப்பிடதக்கவற்றில் ஒன்றாக உள்ளது.

ஏசாயா அவரது மேசியாத்துவத் தீர்க்கதரிசனங்களைக் கொண்டு விசேஷமாக அறியப்படுகிறார் **(லூக்கா 4:17-21: அப்.நடபடிகள் 8:26-35** முதல் ஆகியவற்றைக் கவனிக்கவும்.). அவர் புதிய ஏற்பாட்டில் நாற்பதுக்கும் அதிகமான முறைகள் (இது வேறு எந்தத் தீர்க்க தரிசியைக் காட்டிலும் அதிகமான முறையாகும்) மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளார். மேசியாவைப் பற்றியும் அவரது ராஜ்யத்தை பற்றியுமான அதிகமான வசனப்பகுதிகள் ஏசாயாவின் புத்தகத்தில் இருப்பதால், இது ஐந்தாவது சுவிசேஷம் அல்லது ஏசாயா எழுதிய சுவிசேஷம் என்றுகூடக் குறிபிடப்படுகிறது.

## வரைகுறிப்பு

ஏசாயாவின் புத்தகம் சிற்றளவில் வேதகாமம் என்று அழைக்கப்பட்டுள்ளது. வேதகாமத்தில் அறுபத்தியாறு புத்தகங்கள் உள்ளன, ஏசாயின் புத்தகத்தில் அறுபத்தியாறு அதிகாரங்கள் உள்ளன. இதில் முதல் முப்பத்து ஒன்பது அதிகாரங்கள் பழைய ஏற்பாட்டு வாசனையைக் கொண்டுள்ளன.

### I. எச்சரிக்கைகள் (1-39)

அ. அசீரியாவுடன் யூதா கொண்ட தேவபக்தியற்ற ஒப்பந்தத்திற்கு எதிராக (1 - 12).

ஆ. இஸ்ரவேல் மற்றும் யூதா ஆகிய இரண்டு தேசத்தாராலும் உதவிக்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்த பல்வேறு தேசங்களுக்கு எதிராக (13-27).

இ. எசேக்கியா அரசரால் எகிப்து நாட்டுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த வீணான உடன்படிக்கைக்கு எதிராக (28-35).

ஈ. முன்பு தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்த பல விஷயங்கள் நடந்தேறத் தொடங்கியதைக் காண்பிக்கிற வரலாற்றுரீதியான பகுதி (36-39: இ.வ. 2 இராஜாக்கள் 18-20).

### II. ஆறுதல் (40-66).

அ. பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து விடுதலை (40-48).

ஆ. மேசியா வெளிப்படுத்தப்படுதல் (49-57): துன்புறும் ஊழியர் (53)!

இ. மேசியாவும் அவரது ராஜ்யமும்: சிறையிருப்பிலிருந்து திரும்புதலுக்கான குறிப்புகள் (58-66).

### ஏசாயாவின் புத்தகத்தில் இருந்து பாடங்கள்

இங்கு கிறிஸ்து மற்றும் அவரது ராஜ்யம் பற்றி ஏசாயா புத்தகத்தில் இருந்து ஒரு சில வசனப்பகுதிகள் தரப்படுகின்றன : ஈசாயிலிருந்து புறப்படும் ஒரு வேர் (11:1), கன்னியிடம் இருந்து பிறத்தல் (7:14), யோவானின் ஊழியம் (40:3, 4), அவரது பாடுகள் மற்றும் மரணம் (53), அவரது உயிர்த்தெழுதல் (25:8), பரலோகத்தில் தாவீதின் அரியணையில் அமருதல் (9:6) , தரப்பட விருக்கும் ஒரு புதிய பெயர் (62:12).

மேசியாவைப் பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் பல, இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்களினால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டன; மற்றும் அவை இன்றைய நாட்களிலும் சிலரால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. யூதர்கள் மாம்சப்பிரகாரமான நிறைவேற்றத்தைக் கண்ணோக்கினர்; அதே வேளையில் இயேசு தமது ராஜ்யமானது இவ்வுலகத்துக்கு அடுத்ததல்ல என்று வலியுறுத்தினார் **(யோவான் 18:36).** வாழ்வை பொறுத்தமட்டில், ஏசாயா புத்தகத்தில் உள்ள சமாதானம் பற்றிய வாக்குத்தமானது அதன் நிறை வேற்றத்தைத் தேவனுடைய மக்களின் இருதயத்தில் கண்டறிகிறது; இந்த வாக்குத்தத்தின் இறுதி நிறைவேற்றமானது பரலோகத்தில் நடைபெறும். மீண்டும், புதிய வானம் மற்றும் புதிய பூமி (65:17) என்பது தோற்ற கால உறவுமுறையை மீளக்கட்டுவிப்பதைக் குறித்தது; நமக்கு, இது தேவனுடன் நாம் இருக்கப் போகும் இடமான பரலோகத்தைப் பற்றிப் பேசுவதாய் இருக்கிறது.

லூசிஃபேர் (14 : 12, KJV : NASBயில் "star of the morning" [''விடிகாலையில் வெள்ளி"] என்று உள்ளது) என்பதைப் பற்றியும் தவறாகப் புரிந்துகொள்ளுதல் சூழ்ந்துள்ளது. லூசிஃபேர் என்ற பெயர் பிரகாசிக்கும் ஒருவன் என்று அர்த்தப்படுகிறது. இது சாத்தானையல்ல, ஆனால் பாபிலோனையே குறிப்பிடுகிறது. வேதவசனத்தில் லூசிஃபேர் என்ற பெயர் இந்த ஒரே ஒரு இடத்தில்தான் வருகிறது.



மற்ற தீர்க்கதரிசிகளைப்போன்றே, ஏசாயாவும் உண்மைதன்மைக்கு உதாரணமாய் இருக்கிறார். எபிரெயர் 11:37 வசனம் இவரையே குறிப்பிடுகிறது என்று பலர் நினைக்கின்றனர். ஏசாயா தமது தொண்ணூறாவது வயதில், மனாசே அரசனின் உத்தரவுப்படி ஒரு கரோப் மரத்தில் கட்டி வைக்கப்பட்டு, மரத்தோடு இரண்டாக அறுக்கப்பட்டார் என்று பாரம்பரியங்கள் கூறுகின்றன.

பாடம் 1

# பணக்கார வாலிபன் (மத்தேயு 19:16 – 22)

தேவனின் செல்ல பிள்ளைகளே, உங்கள் அனைவருக்கும் இந்த அண்ணனின் வாழ்துக்கள்!

ஒருமுறை ஒரு வாலிப அண்ணன் ஆண்டவர் இயேசுவிடம் வந்து, நல்ல போதகரே! நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையை செய்ய வேண்டும் என்று கேட்டான். பிள்ளைகளா, இன்று எத்தனையோ வாலிப அண்ணன்கள் நல்லா படிக்கனும், நல்ல வேலை கிடைக்கனும், நான் ஜாலியாக இருக்கனும், அதற்கு நான் என்ன செய்யனும் என்று கேட்பாங்க. ஆனால், இந்த வேதகாமத்தில் சொல்லப்படும் அண்ணன், இயேசுவிடம், நான் நித்திய ஜீவனை பெறுவதற்கு என்ன செய்யனும் என்று கேட்டாங்க. இயேசு என்ன பதில் சொன்னார் தெரியுமா? நீ தேவனுடைய வார்த்தைகளை கைக்கொள்ள வேண்டும், என்றார்.

அதற்கு அந்த அண்ணன் எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு கொலை செய்யக்கூடாது, யார் பொருளையும் திருடக் கூடாது, பொய் சொல்லக் கூடாது, உன் அப்பா அம்மாவை கனம்பண்ணனும், அதுமாத்திரம் அல்ல உன்னைப்போல எல்லாரையும் நேசிக்கனும் என்று இயேசு சொன்னார். அந்த அண்ணன் என்ன சொன்னாங்க தெரியுமா? நான் இவைகளை என் சிறுவயது முதல் செய்கிறேன் என்பது மாத்திரமல்லாமல், இன்னும் என்னிடத்தில் என்ன குறை உண்டு சொல்லுங்கள் என்று கேட்டான்.

பிள்ளைகளா, நீங்கள் உங்கள் அப்பா அம்மாவிடம் இதுமாதிரி, நான் எதாவது தவறு செய்கிறேனா ? எனக்கு சொல்லுங்க அப்பா, சொல்லுங்க அம்மா, நான் என்னை சரிசெய்து கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்களா ? இந்த அண்ணன் இயேசுவிடம், என்னிடத்தில் எதாவது குறை உண்டா என்று கேட்டான். அதற்கு இயேசு, நீ பரிபூரண சற்குணராக இருக்க விரும்பினால், உனக்கு உள்ள எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடு. அப்பொழுது பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றி வா, என்று சொன்னார். அந்த வாலிப அண்ணன் பெரிய பணக்காரனாக இருந்தபடியால், இந்த வார்த்தையை கேட்டதும் கவலைபட்டு இயேசுவைவிட்டு போய்விட்டான்.



என் அன்புச்செல்லங்களா ! இந்த அண்ணன் ஆசையாய் இயேசுவிடம் வந்து, நான் நித்திய ஜீவனை அடைய என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்; என் குறையை சொல்லுங்கள் என்றான். ஆனால் இயேசு சொல்வதை கேட்டு கீழ்படியமுடியவில்லை என்பதினால், அவன் இயேசுவையே விட்டுவிட்டு போய்விட்டான். நீங்களும் உங்கள் அப்பா, அம்மா, பள்ளி ஆசிரியர், உங்களை உண்டாகிய கடவுளுக்கு கீழ்படியவில்லை என்றால், நீங்களும் இயேசு ஆண்டவரை விட்டு போகவேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். எனவே, கீழ்படியுங்கள்! ஜெபம்பண்ணுங்கள்! பைபிள் படியுங்கள்! இயேசுவை பற்றி எல்லாருக்கும் சொல்லுங்கள். அப்பொழுது நீங்கள் இயேசுவோடு இருப்பீர்கள், இயேசு உங்களோடு இருப்பார். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம்:**

**மத்தேயு 16 : 24**

ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

உங்கள் அண்ணன்
**எஸ். அன்பு ஏசுதாஸ்**

பாடம் 2

# ரெகோபெயாம்

ஹாய் குட்டீஸ் ! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். குட்டீஸ், வாலிப வயதில் ராஜாவான ஒருவரைப் பற்றி தெரிந்துக்கொள்ளலாம்.

சாலமோன் ராஜாவை பற்றி உங்களுக்கு தெரியும் தானே? அவர் இறந்தப் பிறகு, அவருடைய மகனான வாலிபன் ரெகொபெயாம் ராஜாவானான். இஸ்ரவேலர்கள் ராஜாவான ரெகொபெயாமிடத்தில் வந்து உம் தகப்பனாகிய சாலமோன் ராஜா பாரமான சுமைகளையும் வேலைகளையும் எங்கள்மேல் சுமத்தினார், அதை எங்களுக்கு சுலபமாக்குங்கள். அப்பொழுது நாங்கள் உம்மை சேவிப்போம் என்றார்கள். அதற்கு ராஜா, ஜனங்களை நோக்கி; மூன்று நாள் பொறுத்திருந்து என்னிடத்தில்

திரும்பிவாருங்கள், நான் உங்களுக்கு மறு உத்தரவு கொடுக்கிறேன் என்றான்.



ராஜாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனிடத்தில் நின்ற முதியோரிடத்தில் சென்று, இந்த காரியத்தைக் குறித்து அவர்களுடைய ஆலோசனையை கேட்டான். அவர்கள் அவனுக்கு ஜனங்கள் சொல்வதின்படி அவர்களுக்கு செய்வதால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காராயிருப்பார்கள் என்றார்கள்.

பிறகு ரெகொபெயாம் அவர்களின் ஆலசோனையை தள்ளிவிட்டு, தம் வயதையொத்த வாலிபர்களிடத்தில் சென்று ஆலோசனைப் பண்ணினான். அவர்கள் அவனுக்கு, ஜனங்கள் சொல்கிறபடி கேட்காமல் இன்னும் அதிகமான சுமைகளை அவர்கள் மேல் கட்டளையிடு என்றார்கள்.

மூன்று நாள் சென்று அவனிடம் மறுவுத்தரவு கேட்க வந்த ஜனங்களிடம், தன் சமுகத்தில் நின்ற தன் வயதையொத்த வாலிபர்கள் சொன்ன ஆலோசனையின்படியே ஆணையிட்டான். அதனால் ஜனங்கள் அவனுக்கு விரோதமாக எழும்பி, அவன் ஸ்தானத்தில் யெரோபெயாம் என்ற சாலமோனின் ஊழியக்காரனை ராஜாவாக்கினார்கள்.

குட்டீஸ் ! நாம் எந்ததொரு முடிவை எடுக்கும் முன்பு, நம்மை படைத்த எல்லா ஞானமும் நிறைந்த தேவனிடம் ஆலோசனைக் கேட்க வேண்டும். தேவனுடைய ஆலோசனைகள் எல்லாம் பைபிளில் இருக்கிறது. ஆகையால் தினமும் பைபிள் படியுங்கள். மேலும், அதை நமக்கு சொல்லத்தான் தேவன் போதகர்களை கொடுத்திருக்கிறார். நீங்க செய்வீங்க தானே?

**மனன வசனம் :**

**சங்கீதம் 32:8**

நான் உனக்குப் போதித்து. நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

**– குயினி பிரதீப்.**

பாடம் **3**


# ஸ்தேவான்

அன்புள்ள குட்டீஸ்களுக்கு, ஆண்டவர் இயேசுவின் பெயரால் அன்பின் வாழ்த்துகள். உங்கள் எல்லாருக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம்.

முதலாம் நூற்றாண்டிலே, எருசலேமிலே சபை உண்டாகி, விசுவாசிகள் பெருகினார்கள். மூவாயிரம், நான்காயிரம், ஐயாயிரம் என விசுவாசிகள் பெருகிக்கொண்ட இருந்தனர். அப்பொழுது சபையில் உணவு பரிமாறுவதில், சில கிரேக்க விசுவாசிகள், தங்கள் விதவைகள் சரியாக கவனிக்கப்படவில்லை என மனவருத்தப்பட்டனர். அதை அவர்கள் அப்போஸ்தலரிடம் சொல்லி முறுமுறுத்தனர்.

அப்பொழுது அப்போஸ்தலர்கள் எல்லாரும், விசுவாசிகளில் ஞானமும் நற்சாட்சியுமுள்ள ஏழுபேரை உதவிக்காரர்களாக ஏற்படுத்தினர். அந்த ஏழுபேரில் ஸ்தேவானும் ஒருவர். இவர் வாலிபராக இருந்தாலும் உணவு பரிமாறவோ, சாப்பிட்ட பிறகு அந்த இடத்தை சுத்தம் செய்யவோ கொஞ்சங்கூட சங்கடப்படாமல், மிகவும் வந்தோஷமாக இந்த வேலைகளை செய்தார்.

ஸ்தேவான் தேவனுடைய பெலத்தினாலே பெரிய அற்புதங்களையும் அடையாங்களையும் செய்தார். அதுமட்டும் இல்லாமல் ஆண்டவர் இயேசுவைக் குறித்து அநேகருக்கு சுவிசேஷம் அறிவித்தார். ஒருமுறை அப்படி அறிவிக்கும் பொழுது யூதர்கள் கோபமடைந்து, கல்லால் அடித்தே அவரை கொலை செய்தார்கள். சாகும் தருவாயிலும் கூட, தன்னை கொலை செய்த அனைவரையும் தேவன் மன்னிக்கும்படியாக ஜெபம் செய்தார். அதனால் அவர் பரலோகத்தையும், இயேசுவையும் தரிசித்தார்.



குட்டீஸ்! ஸ்தேவான் அண்ணனை கவனித்தீர்களா? சபையில் எந்த வேலைக்கொடுத்தாலும் அதை சந்தோஷமாக செய்தார். அதுமட்டுமில்லாமல் தன்னை கொலை செய்தவர்களுக்கு கூட நன்மை செய்தார். நீங்கள் எப்படி சபையில் வேலை செய்கிறவர்களாக இருக்கிறீர்கள் ? (சபை சுத்தம் செய்தல், பாய் விரித்தல், சேர் போடுதல், முடியாதவர்களுக்கு உதவி செய்தல் போன்றவை) உங்களை கஷ்டப்படுத்தினவர்களுக்கு

நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பதிலுக்கு கடப்படுத்துகிறீர்களா அல்லது நன்மை செய்கிறீர்களா? நீங்கள் நன்மை செய்தால் தேவன் உங்களோடு இருப்பார்.

**மனன வசனம்:**

**1கொரி 15:58**

ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்போழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

– **பிரியா ஆண்டனி**

## சென்ற மாதம் பெயர் விடுபட்டவர்கள்

1. R. பால் ஜெயராஜ் – சென்னை
2. Mrs. ஆலிவ் தேவதாஸ் – சென்னை
3. S. பாக்கிய ராஜன் – மதுரை
4. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி

## சிறுவர்க்கான கேள்விகள்

1. பணக்கார வாலிபன் சிறுவயது முதல் செய்து வந்தது என்ன?
2. அந்த வாலிபன் துக்கத்தோடு போனது ஏன்?
3. ரெகோபெயாம் செய்த தவறு என்ன?
4. அதனால் ஏற்பட்ட விளைவு என்ன?
5. ஸ்தேவான் யாருக்காக ஜெபம் செய்தார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-03-2017**

## ஜனவரி மாத சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
2. A. கெனித் சாம் – மதுரை

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# பிப்ரவரி மாத கேள்விகள்

1. பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் எப்படியிருப்பார்கள்?
2. எந்த மனுசனுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை மோசமுள்ளதாக இருக்கும்?
3. நல்லொழுக்கங்களை எது கெடுக்கும் ?
4. நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன் என்றவர் யார்?
5. 'நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத்தவிர தேவன் இல்லை' என வாசிப்பதெங்கே?
6. வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதை செய்தாலும் எப்படி செய்ய வேண்டும்?
7. உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை யார் மூலமாய் யாருக்கு செலுத்த வேண்டும்?
8. தேவன் எதற்கு மேலாக நாம் சோதிக்கப்பட இடங்கொடுப்பதில்லை?
9. நன்மையை யோசிக்கிறவர்களுக்கு என்ன உண்டு?
10. சோர்ந்து போகாமல் நற்கிரியை செய்கிறவர்களுக்கு தேவன் என்ன அளிப்பார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-03-2017**

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## ஜனவரி மாத பதில்கள்

1. சங் 32:10 2. புல 3:22 3. சங் 147:11
4. நீதி 3:34, யாக் 4:6 5. ஆதி 6:8 6. லூக் 1:28
7. சங் 85:10 8. யோவா 1:17 9. சங் 103:11
10. சங் 90:14

### ஜனவரி மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1.Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
2.Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
3. J. மாலதி செல்வம் – சீர்காழி
4. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
5. Mrs. மேரி ராஜ் – மதுரை
6. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
7. R. ஞான சிரோன்மணி – சமயநல்லூர்
8.S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
9. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
10. A. ரோஸ் மேரி – சென்னை
11. Mrs. ஜோன் தேவநாயகம் – நெல்லை
12. Mrs. S. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோயில்
13. Mrs. ஆலிவ் தேவதாஸ் – சென்னை
14. G. அந்தோனி தாஸ் – பரமக்குடி
15.Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
16. Mrs.C. லீமாரோஸ் – சென்னை
17. R. பால் ஜெயராஜ் – சென்னை
18. D. குளோரி திலகவதி – ஈரோடு
19. Sis.J. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
20. Mr. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – மதுரை
21. J. ஜான்ஸி – ஆனைமலை
22. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
23. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
24. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
25. S.ஜெயராஜ் – பொள்ளாச்சி
26. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
27. S.M. தவமணி தேவி – திருப்பூர்
28. Mrs. சாந்தா ஜெயகுமார் – சென்னை
29. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை
30.Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
31. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
32. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
33. S. பாக்கிய ராஜன் – மதுரை
34. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
35. Mrs.D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
36. Dr.D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
37. Mrs. ரூபவதி நோபில் – நெல்லை
38. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
39. Mrs. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
40. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
41. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
42. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – சென்னை
43. A. தீமோத்தேயு – கோவை
44. G. ஏஞ்சலம்மாள் - வளர்நகர்
45. J . விஜய் - வளர்நகர்
46. J.ஜோசப் - தூத்துக்குடி
47. Mrs. லில்லி ஆல்பர்ட் - நெல்லை
48. Mrs. மெர்ஸி ரூபஸ் - சேலம்
49. R. சரோஜா - தென்கலம்
50. Mrs. கேற்றி செல்லத்துரை - சென்னை
51. Mrs. லூயீஸ் ரூபி - ஆம்பூர்
52. S. டேவிட் சாந்தகுமார் - நெல்லை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# 2017 ஜனவரி மாத ஊழியங்கள்




மதுரை சக்கிமங்கலம் பகுதியில் பார்வையற்றோர் மத்தியில் நமது ஆசிரியர் தேவ செய்தி வழங்கியபோது ..




சக்கிமங்கலத்தில் பார்வையற்றோருக்கு வழங்கப்பட்ட பரிசு பொருட்கள் ..




மதுரை அரசரடி கிறிஸ்துவின் சபையின் 22ம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திர ஐக்கிய ஆராதனையில்
பங்குபெற்ற சபையார் மற்றும் செய்தி கொடுக்கும் ஆசிரியர் ...




மதுரையில் வேதவசனங்களை விதைக்கும்
ஆத்தும ஆதாய களப்பணியாளர்கள்...




அரசரடியில் திருமுழுக்கு பெறும் வாலிப சகோதரன்...

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th February 2017


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்







அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்


அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்






உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers